பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**15 09 2026** **TUESDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மனிதகுல முன்னேற்றமும், உலக அமைதியும் ஒருசேர மேற்கொள்ளப்பட வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

2. ஒடிஷாவின் அறுவடை திருநாளான **Nuakhai** பண்டிகையையொட்டி குடியரசுத் தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

3. யமுனை நதியை சீரமைப்பதற்கான **Kishau** அணைக்கட்டு திட்ட ஒப்பந்தம், மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித் ஷா முன்னிலையில் கையெழுத்தானது.

4. மேகாலயாவில் தொலைதூரப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கான நடமாடும் மருத்துவ சேவையை அம்மாநில முதலமைச்சர் திரு. **Conrad Sangma** தொடங்கி வைத்தார்.

5. ஜெய்ஷே முகமது தீவிரவாத இயக்கத் தலைவர் மசூத் அசார், ஆப்கானிஸ்தானில் பதுங்கியிருப்பதாக பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

- இனி விரிவான செய்திகள் - -

<<<<<<<>>>>>>>

மனிதகுல முன்னேற்றமும், உலக அமைதியும் ஒருசேர மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம் என்று, குடியரசு துணைத்தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், உலக நாடுகள், பரஸ்பர நலன் கருதி, ஒருங்கிணைந்து பணியாற்றுவது அவசியம் என்றும் குறிப்பிட்டார்.

நாட்டின் வெளியுறவுக் கொள்கைகள் குறித்த ஆராய்ச்சியை வலுப்படுத்தவும், விண்வெளி, இணைய பாதுகாப்பு மற்றும் பிற முக்கிய தொழில்நுட்பங்களை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

பல்கலைகழகங்கள் மற்றும் இளம் அறிஞர்களுடனான ஒத்துழைப்புகளை, உலக விவகாரங்களுக்கான இந்திய கவுன்சில் விரிவுபடுத்த வேண்டும் எனவும் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் கேட்டுக் கொண்டார்.

<<<<<<<>>>>>>>>

ஒடிஷாவின் அறுவடை திருநாளான **Nuakhai** பண்டிகையையொட்டி குடியரசுத் தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், விவசாய சமுதாயத்தின் பாரம்பரிய திருநாளாக கொண்டாடப்பட்டுவரும் **Nuakhai** பண்டிகையையொட்டி நாட்டு மக்களுக்கு தமது மனம் நிறைந்த வாழ்த்துகளை தெரிவிப்பதாக கூறியுள்ளார்.

குடும்ப ஒற்றுமை, சமூக நல்லிணக்கம், நட்பு ஆகியவற்றின் சிறப்புகளை உணர்த்தும் இந்த திருநாளில் பரஸ்பரம் நல்லெண்ணத்தையும், நல்லிணக்கத்தையும் வலுப்படுத்துவோம் என்று கூறியுள்ளார்.

மகிழ்ச்சி, அமைதி, முன்னேற்றப் பாதையில் மக்கள் நடைபோட வேண்டும் என வாழ்த்துவதாகவும் குடியரசுத் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், உழவர்கள் மிகுந்த மகிழ்ச்சியோடு தங்களது அறுவடையை கொண்டாடும் இந்த நாளில், மக்களிடையே ஒற்றுமை உணர்வு தழைத்தோங்கட்டும் என்று கூறியுள்ளர்.

இந்த திருநாள் சமூக நல்லிணக்கத்தையும், மகிழ்ச்சியையும், முன்னேற்றத்தையும் உருவாக்கும் என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<<>>>>>>>>

யமுனை நதியை சீரமைப்பதற்கான **Kishau** அணைக்கட்டு திட்ட ஒப்பந்தம், மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித் ஷா முன்னிலையில் புதுதில்லியில் இன்று கையெழுத்தானது.

உத்தரப்பிரதேசம், உத்தராகண்ட், இமாச்சலப் பிரதேசம், ஹரியானா, ராஜஸ்தான் மற்றும் தில்லி முதலமைச்சர்கள், இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.

இந்த திட்டத்திற்கான மொத்த செலவில் **90** சதவீதத்தை மத்திய அரசு வழங்கும் என்றும், எஞ்சிய **10** சதவீத நிதியை, சம்பந்தப்பட்ட மாநில அரசுகள் பகிர்ந்து கொள்ளும் என்றும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

<<<<<<<>>>>>>>

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடாக இந்தியா திகழ்கிறது என்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஜனநாயக தினத்தையொட்டி, அவர் விடுத்துள்ள சமூக வலைதள பதிவில், ஜனநாயக கட்டமைப்பில் அனைத்துத்தரப்பு மக்களின் பங்கேற்பு, சமத்துவம், அரசியல் சாசன மாண்புகள் மற்றும்

இணக்கமான அணுகுமுறை போன்ற உயரிய கொள்கைகளுடன் இந்தியா தனது ஜனநாயகத்தை போற்றி வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஜனநாயக திருவிழாவில் நாட்டு மக்கள் அனைவரும் பங்கேற்று சிறப்பிக்க வேண்டும் என்று கூறியுள்ள அவர், எவ்வித பேதமும் இன்றி அனைவரின் குரலுக்கும் மதிப்பளிக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

பன்னெடுங்காலமாக பாதுகாத்து வரும் இந்தியாவின் ஜனநாயக மாண்புகளை எதிர்கால சந்ததியினருக்கும் நாம் கொண்டு செல்ல வேண்டும் என்று திரு கிரண் ரிஜிஜூ வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<<>>>>>>>

தூய்மையே சேவை இயக்கத்தை அரசு அலுவலகங்களில் அமைப்பு ரீதியாக மத்திய அரசு கொண்டுவர உள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

ஆறாவது தூய்மையே சேவை சிறப்பு இயக்கம் தேசப்பிதா காந்தியடிகளின் பிறந்த நாளான வரும் அக்டோபர் 2-ஆம் தேதி தொடங்கி, மாதத்தின் கடைசி நாளான 31-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

அனைத்து அரசு அலுவலகங்களில் தூய்மை சேவை இயக்கப்பணிகளை ஒருங்கிணைக்கும் வகையிலான இணையதளத்தை

நாளை புதுதில்லியில் தாம் தொடங்கிவைக்க உள்ளதாக டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

சுற்றுப்புற தூய்மையை பராமரிப்பது குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துவது, அன்றாட பழக்க வழக்கங்களில் மாற்றங்களை கொண்டுவருவது, மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை தரவாரியாக பிரித்து ஆக்கப்பூர்வமான பயன்பாட்டுக்கு கொண்டுவருவது ஆகியவற்றை நோக்கமாக கொண்டு ஆறாவது சிறப்பு தூய்மையே சேவை இயக்கம் நடைபெறவுள்ளதாக டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>>>

மேகாலயா மாநிலத்தின் தொலைதூரப் பகுதிகளிலும் வசிக்கும் மக்களுக்கு, நவீன மருத்துவ சேவைகள் கிடைக்கச் செய்யும் வகையில், நடமாடும் மருத்துவ சேவைப் பிரிவுகளை அம்மாநில முதலமைச்சர் திரு. **Conrad Sangma** இன்று தொடங்கி வைத்தார்.

ஷில்லாங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், இந்த நடமாடும் மருத்துவ வாகனங்கள் மூலம், இரண்டு மாவட்டங்களுக்குட்பட்ட **93** கிராமங்களைச் சேர்ந்த சுமார் **2** லட்சத்திற்கும் அதிகமான மக்கள் பயனடைவார்கள் என்றார்.

குறிப்பாக மலைக் கிராமங்களில் வசிப்போருக்கு, அடிப்படை மருத்துவ உதவிகள் வழங்கப்படுவதுடன், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்று அவர் கூறினார்.

குறிப்பாக, தொற்றா நோய்கள் பரவாமல் தடுப்பதுடன், பாதிக்கப்பட்ட மக்களைக் கண்டறிந்து, அவர்களுக்கு உரிய சிகிச்சை அளிப்பதில் சிறப்புக் கவனம் செலுத்தப்படும் என்றும் திரு. **Conrad Sangma** தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

கேரளத்தில் நிலவும் மின்சாரப் பற்றாக்குறைக்குத் தீர்வுகாண போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக, அம்மமாநில மின்துறை அமைச்சர் திரு.**Sunny Joseph** தெரவித்துள்ளார்.

திருவனந்தபுரத்தில் செயதியாளர்களிடம் பேசிய அவர், பற்றாக்குறையை சமாளிப்பதற்காக, கூடுதல் விலை கொடுத்து மின்சாரத்தை வாங்குவது குறித்தும், மாநில அரசு பரிசீலித்து வருவதாகக் கூறினார்.

மின்சாரப் பற்றாக்குறைப் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காணப்படும் என்றும் திரு.**Sunny Joseph** தெரவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>>

ஜார்க்கண்ட் மாநில அரசுப் பணியாளர்கள் தேர்வாணையம் உள்ளிட்ட அமைப்புகளால் நடத்தப்பட்ட ஆள்சேர்ப்பு தேர்வுகளை ரத்து செய்த அம்மாநில அரசின் உத்தரவுக்கு எதிரான தடையை நீட்டித்து, மாநில உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கை விசாரித்த நீதிபதி திரு.தீபக் ரோஷன் தலைமையிலான அமர்வு, இது தொடர்பாக மாநில அரசின் பதிலை 48 மணி நேரத்திற்குள் தாக்கல் செய்ய உத்தரவிட்டுள்ளது.

வழக்கின் அடுத்த விசாரணை, வரும் 18-ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இன்றைய வழக்கு விசாரணையின்போது ஆஜரான மாநில அரசின் வழக்கறிஞர், இது குறித்து மாநில குற்றப் புலணாய்வு காவல்துறையினர் விசாரணை நடத்தி வருவதாகவும், அதன் விவரம், நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என்றும் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>>

ஜெய்ஷ் ஏ முகமது தீவிரவாத இயக்கத் தலைவர் மசூத் அசார், ஆப்கானிஸ்தானில் பதுங்கியிருப்பதாக, பாகிஸ்தான் உளவு அமைப்புகள் தெரிவித்துள்ளன.

அவரது இருப்பிடம் பற்றி சரியான தகவல் தருவோருக்கு, 70லட்சம் பாகிஸ்தான் ரூபாய் வெகுமதி அளிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், மசூத் அசார், சர்வதேச அமைப்புகளிடம் பிடிபடாமல் பாதுகாக்கும் நோக்கிலேயே, பாகிஸ்தான் இதுபோன்ற தகவல்களை பரப்பி வருவதாக, தீவிரவாதத்திற்கான நிதியுதவி தடுப்புப் படை குற்றம்சாட்டியுள்ளது.

ஆப்கானிஸ்தானை ஆளும் தாலிபன் நிர்வாகமும், பாகிஸ்தான் வெளியிட்ட தகவலை மறுத்துள்ளது. மசூத் அசார் பாகிஸ்தானில் தான் இருப்பதாகவும் ஆப்கானிஸ்தான் உறுதிபட தெரிவித்துள்ளது.

ஆபரேசன் சிந்தூர் நடவடிக்கையின்போது கூட, பகவல்பூரில் அவர் பதுங்கியிருந்ததாக, ஆப்கன் உளவுத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

<<<<<<<>>>>>>>

இந்தியா — சீனா இடையிலான வர்த்தகப் பிரச்சினைகள் குறித்து, இருநாடுகளும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக, மத்திய வர்த்தகத்துறை செயலாளர் திரு.ராஜேஷ் அகர்வால் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வினியோகச் சங்கிலியில் காணப்படும் சவால் மற்றும் கட்டமைப்பு ரீதியான சமச்சீரற்ற தன்மை குறித்து பேச்சு நடத்தி வருவதாகக் கூறினார்.

வர்த்தகப் பற்றாக்குறையை சரிசெய்து, எல்லை தாண்டிய வணிகத்தை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளும் ஆராயப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

புதுதில்லியில் நடைபெற்ற பிரிக்ஸ் உச்சிமாநாட்டின்போது, முதற்கட்டப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்ட நிலையில், அடுத்தகட்டப் பேச்சுவார்த்தைகள் விரைவில் நடைபெறும் என்றும் திரு.ராஜேஷ் அகர்வலால் கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>>

பஞ்சாப், ஹரியானா, தில்லி, குஜராத்தின் கட்ச், தமிழகம், தெற்கு உட்புற கர்நாடகா, கேரளம் மற்றும் புதுச்சேரியில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேற்குவங்கம், சிக்கிம், அஸ்ஸாம், அருணாச்சல பிரதேசம் மற்றும் மேகலாயா மாநிலங்களிலும் ,இதேநிலை காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தமான் — நிகோபார், ஜம்மு-கஷ்மீர், லடாக் யூனியன் பிரதேசங்கள், பீகார், ஜார்க்கண்ட், ஒடிசா மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களில், அடுத்த மூன்று நாட்களுக்கு, சூறைக்காற்றுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

இதனிடையே, சிக்கிமின் பல்வேறு பகுதிகளில் பெய்த கனமழை காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவால், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

நிலச்சரிவு ஏற்பட்ட பகுதிகளில் வசித்த மக்கள், பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டிருப்பதுடன், மாநில பேரிடர் மீட்புப் படையினரும் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

**<<<<<<<END>>>>>>>**